# இந்து முன்னணி
# தமிழ்நாடு

(1980 முதல் 2010 வரை)

## சட்ட விரோத சர்ச்சுகள் தடுத்து நிறுத்தப்பட்டன

- கன்யாகுமரி மாவட்டத்தில் 35 சதவீத கிருஸ்த்தவர்கள் உள்ளதால் அவர்கள் ஆதிக்கம் அதிகம் உள்ளது அரசியல் கட்சிகள் அவர்களுக்கு ஆதரவு கொடுக்கின்றன அந்த மாவட்டத்தில் வீடு கட்டுவது போல் கட்டி **'திடீர் சர்ச்'**சாக அறிவிப்பார்கள் இது போன்று முளைத்த நூற்றுக்கணக்கான திடீர் சர்ச்களை இந்து முன்னணி போராட்டங்களால் தடுத்து நிறுத்தியது.

- தமிழக முதலைமைச்சர் கருணாநிதியின் வலது கரமாக திகழும் எஸ்ரா சற்குணம் என்ற பாதிரியார் தூத்துக்குடி மாவட்டம் ஆறுமுகனேரி அருகில் உள்ள தலைவன்விடலி கிராமத்தில் ஆறு ஏக்கர் நிலம் வாங்கி பைபிள் காலேஜ் மற்றும் சர்ச் கட்ட ஆரம்பித்தார். இந்து முன்னணி, கட்சி ஜாதி வேறுபாடு இல்லாமல் மக்களை திரட்டி போராடியதால் இது வரை சர்ச் கட்ட முடியாமல் உள்ளது.

- திருச்செந்தூர் அருகில் தண்டபத்து கிராமத்திலும் சாத்தான் குளம் அருகிலும் பெருமாள் புரம் கிராமத்திலும், விழுப்புரம் மாவட்டம் அரசூர் அருகில் மாமந்தூரில் முறையில்லாமல் சட்ட விரோதமாக கட்டப்பட்ட சர்ச்களை ஜாதி கட்சி வேறுபாடு இல்லாமல் இந்து முன்னணி தலைமையில் போராடி அகற்றினர்.

- கோவை மாவட்டம் ஆலாந்துறையில் அனுமதி இல்லாமல் சட்ட விரோதமாக நடந்து வந்த பைபிள் கல்லூரியை 2009 நவம்பரில் போராடி தடுத்து நிறுத்தியது.

- திண்டுக்கல் மாவட்டம் ரெட்டியார் சத்திரத்தில் இரண்டு சட்டவிரோத சர்ச்களை தடுத்து நிறுத்தப்பட்டது.

- தமிழகத்தில் கோவில்கள் அருகிலும் மற்றும் முஸ்லீம், கிருஸ்தவர்கள் இல்லாத இடங்களிலும் மசூதி, சர்ச் கட்டப்படுவதை சுமார் 100 இடங்களில் இந்து முன்னணி போராட்டத்தினால் தடுத்து நிறுத்தியுள்ளது.

## கோயில் நில மீட்பு

- தமிழகத்தில் கோயில் நிர்வாகத்தை மதசார்பற்ற அரசு, கையில் எடுத்துக் கொண்டு உள்ளது அரசியல்வாதிகளை கோயில் நிர்வாகத்தில் அறங்காவலர்களாக அரசு நியமிக்கிறது. இவர்கள் கோயில் சொத்துக்களை

பாதுகாப்பதில் அக்கறை கொள்வதில்லை கோயில் சொத்துக்கள் நூற்றுக்கணக்கான இடங்களில் ஆக்கிரமிப்பில் உள்ளது அந்த சொத்துக்களை பாதுகாக்க இந்து முன்னணி தொடர் போராட்டங்களை நடத்தி வருகிறது. மீட்கப்பட்ட கோயில் நிலங்களில் சில

1. திருப்பூர் பெருமாள் கோயில் சொத்து - 8 கோடி
2. வடபழனி கோயில் சொத்து - 15 கோடி
3. திருவண்ணாமலை கோயில் சொத்து - 2 கோடி
4. ஆயிரம் விளக்கு சென்னை கோயில் சொத்து - 5 கோடி
5. தர்மபுரி கோயில் சொத்து - 9.5 ஏக்கர்
6. கோபி சமத்துவபுரம் - 2.5 ஏக்கர்
7. வடலூர் கோயில் சொத்து - 10 ஏக்கர்

# இந்து முன்னணி வெளியீடுகள்

- தமிழகத்தில் இந்துக்களுக்கு விழிப்பூட்டுவதற்காக, உறங்கி கிடக்கும் இந்துக்களை தட்டி எழுப்ப, அப்பாவி இந்துக்களுக்கு இந்துக்களின் உண்மை நிலையை புரியவைக்க 1980 –ல் இந்து முன்னணி துவங்கியதில் இருந்து நூற்றுக்கணக்கான சிறிய வெளியீடுகளை வெளியிட்டுள்ளது. மதமாற்றத்தினால் ஏற்படும் ஆபத்தை விளக்கி ஒரு ரூபாய் புத்தகம் வெளியிட்டு 50,000க்கும் மேற்பட்ட புத்தகங்களை விற்பனை செய்தது. 2010ம் ஆண்டில் **'இந்துக்களுக்கு ஆபத்து'** என்கிற பெயரில் ஒரு ரூபாய் புத்தகம் இந்து முன்னணியின் 6வது மாநில மாநாடு கரூரில் நடைபெற்றபோது வெளியிட்டது. இந்த புத்தகம் ஒரு லட்சத்து இருபதாயிரம் பிரதிகள் விற்றுள்ளது.

இப்படிப்பட்ட சிறு வெளியீடுகள் மூலம் தமிழகத்தில் மிகப் பெரிய கருத்து மாற்றமும் இந்து எழுச்சியும் ஏற்பட்டுள்ளது.

# இராமர் பாலம் பாதுகாக்கப்பட்டது

- சேது சமுத்திர கால்வாய் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு தமிழக அரசு, இராமர் இலங்கை செல்ல கட்டிய பாலத்தை இடிக்க மத்திய அரசும், மாநில அரசும் திட்டமிட்டு 2000 கோடி ரூபாயை மத்திய அரசு ஒதுக்கி வேலை முழுவீச்சில் துவங்கி நடைபெற்றது.

சேது சமுத்திர கால்வாய் திட்டத்தை இராமர் பாலத்தை இடிக்காமல் மாற்று வழியில் நடைமுறை படுத்தவேண்டும் 17 லட்சம் ஆண்டுகளுக்கு முன் இராமர் கட்டிய பாலத்தை இடிக்கக்கூடாது என இந்து முன்னணி நிறுவன அமைப்பாளர் **இராம கோபாலன்** அவர்கள் 2005 டிசம்பரில் திருவல்லிக்கேணியில் தனி ஆளாக கையெழுத்து இயக்கத்தை துவக்கினார்.

2006 மார்ச்சில் நடந்த ஆர்.எஸ்.எஸ் பிரதிநிதி சபாவில் இந்த விஷயம் விவாதிக்கப்பட்டு ஆர்.எஸ்.எஸ் தலைவர் பூஜனிய சுதர்சன்ஜி நாடு முழுவதும் ஒருநாள் கையெழுத்து இயக்கம் நடத்த அறைகூவல் விடுத்து ஒரே நாளில் 35 லட்சம் கையெழுத்து வாங்கி ஜனாதிபதியிடம் கொடுக்கப்பட்டது பின் இதற்காக 2007 ஜுலையில் மதுரையில் 40ஆயிரம் பேர் கலந்து கொண்ட மாநாடு நடந்தது அதே ஆண்டு ஆகஸ்டில் இராமேஸ்வரத்தில் தென்பாரத மக்கள் கலந்து கொள்ளும் மகாயக்ஞ்ம் நடந்தது அதிலும் 40ஆயிரம் பேர் பங்கு பெற்றனர். 2007 செப்டம்பரில் பாரத நாடெங்கும் 71,000 இடங்களில் உண்ணா விரதப் போராட்டம் நடந்தது அதே ஆண்டு அக்டோபர் 12ல் 5,400 இடங்களில் நாடு முழுவதும் சாலை மறியல் போராட்டம் மக்கள் ஆதரவுடன் நடைபெற்றது. டில்லியில் பத்து இலட்சம் பேர் கலந்து கொண்ட மாநாடு நடந்தது இந்த போராட்டங்களால் இராமர் பாலம் காப்பாற்றப்பட்டது.

# திராவிடக் கழகத்திற்கு பதிலடி

➢ தமிழ்நாட்டில் 1925-ல் ஆரம்பிக்கப்பட்ட இயக்கம் ஜஸ்டிஸ் கட்சி இது காங்கிரசை எதிர்ப்பதற்காகவும் பிராமணர்களை எதிர்ப்பதற்காகவும் ஆரம்பிக்கப் பட்டது காலப்போக்கில் இது பிரிட்டிஷாருக்கு ஜால்ரா போடும் கட்சியாகவும் இந்து விரோத கட்சியாகவும் உருவெடுத்தது. இதிலிருந்துதான் திராவிடர் கழகம்(தி.க), திராவிட முன்னேற்ற கழகம்(தி.மு.க), அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்ற கழகம்(அ.இ.அ.தி.மு.க) என கழகங்கள் தோன்றின. இவர்கள் தங்களை திராவிட பாரம்பரியம் என அழைத்துக் கொண்டனர். தி.க வும், தி.மு.க.வும் தொடர்ந்து இந்துமத நம்பிக்கைகளை, இந்து கடவுள்களை, இதிகாசங்களை மற்றும் புராணங்களை மிகவும் அசிங்கமாக, கீழ்த்தரமாக, கொச்சையாக விமர்சித்தனர் இவர்கள் தங்களை பகுத்தறிவுவாதிகள் என்று தம்பட்டம் அடித்துக்கொண்டனர் இவர்களில் பெரும்பாலானவர்கள் சிறந்த மேடை பேச்சாளர்களாக இருந்தனர். நாடகங்களில் சினிமாக்களில் நடித்தனர் பத்திரிக்கைகளும் நடத்தினர்.

இவர்களது பிரச்சாரத்தால் 1950 களில் இருந்த இளைஞர்கள் இந்து மதம் பிற்போக்குத் தனமானது, ஜாதி கொடுமைகளை ஆதரிக்கிறது, பெண்களை இழிவு படுத்துகிறது, விஞ்ஞான சிந்தனை அற்றது என்று எண்ணத் தொடங்கினார்கள். விபூதி, குங்குமம் மற்றும் சந்தனமும் வைக்க வெட்கப்பட்டனர் கோயிலுக்குசெல்வது மூடத்தனமானது எனநினைத்தனர்.**“கடவுளை நம்புகிறவன்”** காட்டு மிராண்டி, முட்டாள், அயோக்கியன். என பிரச்சாரம் நடந்தது இந்து என்றால் வேசி மகன் என்று பிரச்சாரம் செய்தனர்.

பிராமணர்கள் ஆரியர்கள். இவர்கள் சூழ்ச்சியால் திராவிடர்களை கொடுமை படுத்துகின்றனர் என்றும் பிரச்சாரம் செய்தனர். கிருஸ்தவ, முஸ்லீம் மதத்தினருக்கு ஆதரவாக குரல் கொடுத்தனர், மதமாற்றத்தை ஆதரித்தனர் தமிழ்நாட்டை தனி தமிழ்நாடாக ஆக்குவதற்கு இந்து மதத்தை அழிக்கவேண்டும் என பிரச்சாரம் செய்தனர்.

1980-ல் இந்து முன்னணி ஆரம்பித்தவுடன் முதலில் தி.க விற்கு பதிலடி கொடுக்க துவங்கியது பொதுக் கூட்டங்கள் தெருமுனை கூட்டங்கள் வாயிலாக தி.க விற்கு சவால் விட்டது இந்து முன்னணி **“தி.க.விற்கு பக்தர்களின் 50 கேள்விகள்”** என்ற பிரசுரம் மற்றும் **“முகமூடி கிழிந்த தி.க ஒப்பாரி வைக்கிறது”** என்ற புத்தகம் தமிழகம் முழுவதும் வினியோகம் செய்யப்பட்டது. தி.க கூட்டங்கள் நடத்த கூடாது என காவல் நிலையத்தில புகார் மனு கொடுத்தது சட்ட பிரிவு 195 ஏ,பி,சி-ன் படி இந்து மதத்தை இழிவுபடுத்தக் கூடாது என வாதாடியது, தி.க. கூட்டங்கள் சிலவற்றில் கலாட்டாவும் நடந்தது இதனால் இந்து முன்னணி தொண்டர்கள் நூற்றுக்கணக்கானோர் சிறை சென்றனர். அவர்கள் மீது பொய் வழக்குகள் போடப்பட்டன.

இந்து முன்னணியின் இடையறாத, அயராத போராட்டத்தினால் தற்போது தி.க இந்துக்களை இழிவுபடுத்தி எங்கும் கூட்டம் போட முடியாத சூழ்நிலை உள்ளது. தி.க, முஸ்லீம், கிருஸ்த்தவர்களின் கைக்கூலி என்பதை மக்கள் புரிந்து கொண்டனர். தி.க வின் உண்மை சொரூபத்தை இந்து இளைஞர்கள் புரிந்து கொண்டனர்.

தி.க வை இந்துக்கள் முற்றிலும் புறக்கணித்து விட்டனர் தற்போது இளைஞர்கள் தாங்கள், இந்து என்று பெருமிதத்துடன் விபூதி, குங்குமம், சந்தனம் மேலும் ருத்திராட்ச மணிகள் அணிகின்றனர்.

# விநாயகர் சதுர்த்தி மூலம் இந்து எழுச்சி

- 1920 ஆம் ஆண்டு முதல் திராவிட இயக்கங்களின் தாக்கம் காரணமாக தமிழகத்தில் இந்து விரோத பிரச்சாரங்கள் பட்டி தொட்டி எங்கும் பரவியது. இந்து என்றாலே பகுத்தறிவு இல்லாதவன், கற்கால சிந்தனை உடையவன், விஞ்ஞான யுகத்திற்கு எதிரானவன் என்ற மனப்பான்மை தமிழகத்தில் மேலோங்கி நின்று மாயத்தோற்றம் உருவானது. கடவுளை நம்புகிறவன் முட்டாள், காட்டுமிராண்டி என்ற பிரச்சாரம் உச்ச கட்டத்தில் இருந்தது.

இந்து கடவுள்களும், இந்துமத நம்பிக்கைகளும், இராமாயணம், மகாபாரதம் போன்ற இதிகாசங்களும் இழிவு படுத்தப்பட்டன. 1969-ல் சேலத்தில் இராமர் சிலைக்கு செருப்பு மாலை போட்டு ஊர்வலம் நடத்தபட்டது.

1980 –ல் தமிழ்நாட்டில் இந்துக்களுக்காக வாதாட, போராட, பரிந்து பேச ஆரம்பிக்கப்பட்ட இயக்கம் இந்து முன்னணி. தமிழகத்தில் இந்து எழுச்சியை உருவாக்குவதற்காக 1983-ல் விநாயகர் சதுர்த்தி ஊர்வலத்தை திருவல்லிக்கேணியில் இந்து முன்னணி துவக்கியது. 1983-ல் நடந்த ஒரு விநாயகர் ஊர்வலம் தற்போது (2010)தமிழகத்தின் அனைத்து நகராட்சிகளிலும், பேரூராட்சிகளிலும் நடைபெற்றுவருகிறது. 50,000க்கும் மேற்பட்ட இடங்களில் **விநாயகர் சதுர்த்தி விழா** நடைபெற்று வருகிறது. தமிழகத்தில் பொங்கல், தீபாவளிக்கு நிகரான மக்கள் விழாவாக உருவெடுத்துள்ளது. தமிழகத்தில்

**ஓம் காளி, ஜெய் காளி** என்ற கோஷம் விண்ணை முட்ட எழுந்துள்ளது.

மசூதி உள்ள நெடுஞ்சாலைகளில் சுவாமி ஊர்வலங்கள் மேளதாளத்துடன் செல்ல முடியாத நிலை இருந்தது. விநாயகர் சதுர்த்தி ஊர்வலங்கள் மூலமாக, போராட்டங்கள் முஸ்லீம்களின் கல்வீச்சு, செருப்பு வீச்சு இவற்றுடன் போராடி போலீஸ் கைது, சிறைவாசம் இப்படி பல பிரச்சனைகளை சந்தித்து இன்று தமிழக வீதிகளில் திருவல்லிக்கேணி போன்ற 4 இடங்களை தவிர மற்ற இடங்களில் இந்த ஊர்வலங்கள் மேளதாளத்துடன் மசூதி வழியாக செல்லும் சூழ்நிலை உருவாகி உள்ளது. திருவல்லிக்கேணி நெடுஞ்சாலையில் ஊர்வலம் செல்லும் உரிமையை நிலை நாட்ட 15 வருடங்களாக தொடர் போராட்டம், கைது தொடர்கிறது. இளைஞர்கள் மத்தியில் இந்து எழுச்சி உருவாகி **இந்து என்று சொல்லுவோம் தலை நிமிர்ந்து செல்லுவோம்** என்று கோஷமிட்டு ஊர்வலம் பட்டி தொட்டி தோறும் செல்கின்றனர். பெரியார் பிறந்த தமிழகத்தில் இந்து எழுச்சி ஏற்படாது என்று பேசிவந்த சூழ்நிலை மாறி தமிழகம் என்றுமே ஆழ்வார்கள், நாயன்மார்கள் பூமிதான் என்றும் தேசிய தெய்வீக தமிழகம் தான் என்றும் நிலைநாட்டப்பட்டுள்ளது **விநாயகர் சதுர்த்தி எழுச்சி ஊர்வலத்தால்.**

## பாரத பண்பாட்டு பயிற்சி கல்லூரி

➢ இந்து மதத்தை வளர்க்க, பாதுகாக்க, பரப்ப (கிருஸ்தவ பாதிரி போல்) இந்து தர்ம வீரர்கள் உருவாக்க திருச்சியில் இருந்து 7 கி.மீ தொலைவில் உள்ள சீராத்தோப்பு கிராமத்தில் பாரத பண்பாட்டு பயிற்சி கல்லூரியை இந்து முன்னணி 2001 பிப்ரவரி 25ஆம் தேதி துவங்கியது. இந்து தர்ம வீரர்கள் கிராமங்களில் பண்பாட்டு வகுப்பு, பஜனை, கோமாதா பூஜை, பாரத மாதா பூஜை, யோகா வகுப்பு மற்றும் கிராமங்களுக்கு உதவி ஆகியவற்றை செய்யவேண்டும். இப்படி 150 தர்ம வீரர்களுக்கு பயிற்சி கொடுத்து தமிழ்நாட்டில் பல்வேறு கிராமங்களுக்கு அனுப்பப்பட்டனர்.

## பண்பாட்டு வகுப்பு

➢ இந்து மதத்தையும், தர்மத்தையும், பாரத நாட்டின் பாரம்பரியத்தையும், நல் ஒழுக்கத்தையும் சிறுவர்களுக்கு புரியவைப்பதற்காக பகுதி நேர ஊழியர்கள் மூலமாக பண்பாட்டு வகுப்புகள் வாரம் தோறும் இரண்டு மணி நேரம் நடைபெறுகின்றது. இதற்கான பாடவகுப்பு புத்தகம் தயாரிக்கப்பட்டுள்ளது. 2010-ம் ஆண்டு கணக்குபடி தூத்துக்குடி மாவட்டத்தில் 30 வகுப்புகளும், திருச்சியில் 10 வகுப்புகளும், காஞ்சியில் 20 வகுப்புகளும் நடைபெற்று வருகிறது. 1000 வகுப்புகள் நடத்த முயற்சி நடைபெறுகிறது.